செல்லவேண்டுமென்றால், கிட்டத்தட்ட 30 மைல் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கேயிருக்கிற அரசு மருத்துவமனை 4 படுக்கைகளைக் கொண்டது. 4 ஆண்டுகளாக விரிவுபடுத்தவேண்டுமென்று கேட்டு வருகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த ஆண்டிலாவது அந்த மருத்துவமனையை விரிவுபடுத்தித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விக்கிரமசிங்கபுரத்தைப் பற்றி கேள்வி கேட்டுவிட்டு, சாத்தான்குளத்தைப் பற்றிக் கேட்டால் பதில் தருவதற்கு ஏதும் விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

உத்திரமேரூரில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான தங்கும் விடுதி.

164—(* வினா எண். 9842)—**திரு. க. நரசிம்மபல்லவன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூரில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக தங்கும் விடுதி ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) உத்திரமேரூரில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக புதிய விடுதி தொடங்கும் உத்தேசம் ஏதுமில்லை.

திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் நிறைய பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் படிக்கின்ற காரணத்தால், மேலும் பரிசீலித்து அமைத்துத் தரவேண்டும். மேலும் விடுதியில் தங்கி படிக்கின்ற மாணவர்களின் பராமரிப்புக்காக அரசு என்ன உதவிகளைச் செய்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

1987 மார்ச் 25]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூரைச் சுற்றி இருக்கின்ற ஊர்களில் ஏற்கனவே விடுதிகள் இருக்கின்ற காரணத்தால் தற்சமயம் உத்திரமேரூரில் விடுதி அமைக்கும் உத்தேசம் இல்லை. உத்திர மேரூரில் ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதி ஒன்று இருக்கிறது. அந்த விடுதியில் 9 பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள். தனியாகக் கேள்வி போட்டால், மற்ற விவரங்கள் தரப்படும்.

நத்தம் தொகுதியில் புதிய மருத்துவமனை

165—(* வினா எண் 11798)—**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி நத்தத்தில் மருத்துவமனை கட்டித்தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் இல்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4, 5 பேர்கள், அவர்கள் தொகுதிக்கு மருத்துவ மனை கேட்டிருக்கிறார்கள். ஆனால் அமைச்சரவர்கள் இல்லை, இல்லை என்று சொல்கிறார்கள். இது அரசு மருத்துவமனை பற்றியது. மக்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காகவாவது அமைச்சரவர்கள் இரக்கப்பட்டா வது, இந்த நத்தத்திலே மருத்துவமனை ஒன்றை அமைத்துத் தர வேண்டும். காரணம், பிள்ளையார் நத்தத்திலிருந்து விழிநத்தம், மதுரை, திண்டுக்கல், மேலூர் அவசர சிகிச்சைக்கு செல்ல வேண்டு மென்றால் 80 கிலோ மீட்டர் செல்லவேண்டும். மதுரைக்கோ, மேலூருக்கோ செல்ல வேண்டுமென்றாலும் அதிக தூரம் இருக் கின்ற காரணத்தால், ஏழை எளிய மக்கள் அவசரமாக நோயாளி களை அழைத்துச் செல்ல வேண்டுமென்றாலும் ரொம்ப சிரமமாக இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சரவர்கள் நத்தத்திலே 40 படுக்கைகள் கொண்ட ஒரு அரசு மருத்துவ மனையை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.